(இ) அப்படி எடுக்கவில்லையெனில், சர்க்கார் இது குறித்து ஆவன செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மத்திய சாலை நிதி உதவி கொண்டு பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. எஸ். சந்தானம் : தலைவர் அவர்களே, அத்தகைய பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள்ளாக செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு சீக்கிரமாகச் செய்யலாமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு அந்த ஆற்றைக் கடகக வேண்டுமானால் வண்டிகளும் மற்றவைகளும் ஆற்றிலே இறங்கித்தான் செல்ல வேண்டி இருக்கிறது. அடிக்கடி ஆற்றிலே வெள்ளம் வருகின்றபொழுது மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது. எனக்கே கூட அதைக் கடக்கிறபொழுது அந்த அனுபவம் ஏற்பட்டது. அந்த நிலைமையை மனதில் கொண்டு இந்த மழைக் காலத்திற்குள் வேலையையும் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினரைப் போல் எல்லோரும் அந்த திட்டத்தைப் பற்றிச் சொன்னதால் அந்த திட்டம் ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே தற்போதுள்ள முதலமைச்சர் அவர்கள் அங்கே விஜயம் செய்தபோது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தார்கள். அந்த நேரத்திலே உடனடியாக நான் பார்த்து செய்வேன் என்ற வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவும் பஞ்சத்தைப் போக்கவும் நிவாரணமாக இந்த ஆண்டிலே, மழைக் காலத்திற்குள்ளே அதை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

லாரி ஓட்டுநருக்குச் சம்பள விகிதம்

*528 **வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை கார்ப்பொரேஷனில் வேலை செய்யும் லாரி டிரைவர்களுக்கும், மற்ற நகர சபையில் (**Municipalities**) வேலை செய்யும் லாரி டிரைவர்களுக்கும் அடிப்படைச் சம்பள விகிதத்தில் வித்தியாசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதனை ஒருமுகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) உண்டு. மாநகராட்சியில் லாரி ஓட்டுநருக்கு மாத அடிப்படை சம்பளம் ரூ. 90—4—110—5—140. நகராட்சிகளில் ஓட்டுநருக்கு மாத அடிப்படை சம்பளம் (கனமான வண்டிகளுக்கு) ரூ. 75—1—85 ; (இலேசான வண்டிகளுக்கு) ரூ. 70—1—80.

(இ) இல்லை.

1969 மார்ச் 28]

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளிலே வேலை செய்கின்ற லாரி டிரைவர்களுக்கு உள்ள சம்பளத்தை, மாநக ராட்சியில் வேலை செய்பவர்களுக்கு "ஈக்குவல்" ஆக, சமமாக உயர்த்து வது நல்ல சமாச்சாரம் என்றாலும் நகராட்சிகளிலே வேலை செய்கின்ற லாரி ஓட்டுபவர்களை மாத்திரம் கணக்கிலெடுக்காமல், நகராட்சிகளிலே வேலை செய்கின்ற அத்தனை சிப்பந்திகளுக்கும் இதே மாதிரி சர்க்காரிலே உள்ள சிப்பந்திகளுக்கு ஒப்ப கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாநகராட்சியிலே லாரி ஓட்டு பவர்களுக்கு கொடுக்கிற சம்பள அளவுக்கு நகராட்சியிலே இருப்பவர் களுக்கும் கொடுத்ததாக நான் பதில் அளித்ததாக நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் அப்படிப்பட்ட பதிலைச் சொன்னதாக, இங்கே விளக்கம் இல்லை. எப்போதுமே எல்லா பணிகளிலும் நகராட்சி களுக்கும் மாநகராட்சிகளுக்கும் ஊதியத்திலே வேறுபாடு இருந்து வரு கிறது. நகராட்சியினுடைய நிதி நிலை அதிகப்பட்டு, அப்படிப்பட்ட பிரச்சினை களைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை வந்தால், நிச்சயமாக அவைகளைக் கவனிக்க அரசாங்கம் தயங்காது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளில் லாரி ஓட்டுபவர்களுக்கு சம்பளம் இல்லாது, நாட்படி கொடுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அகவிலைப் படியாக ரூ. 75 தரப்படுகிறது. அரசாங்க விகிதத்தில் அகவிலைப் படியும், அவைகளுக் கொப்ப ரூ. 17 என்ற விகிதத்தில் வீட்டு வாடகைப் படியும் மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்படுகிறது. நகராட்சி மன்றத்திற்கு அகவிலைப்படி ரூ. 75-ம், ரூ. 75-க்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 7-ம், ரூ. 75-க்கும் குறைவாக சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 3-ம் வீட்டு வாடகைப் படியாக வழங்கப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, இந்த டிரைவர்கள் என்ற பட்டியலிலே பஞ்சாயத்து யூனியனிலே வேலை செய்கின்றவர்களுடைய பெயரும் வருகின்றதா? அவர்கள், மற்ற எல்லா டிரைவர்களைக் காட்டிலும் பி. டபிள்யூ.டி., ஹைவேஸ், இவைகளில் உள்ள டிரைவர்களைக் காட்டி லும் குறைவாகச் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைக் கருதி, ஏதாவது விதிவிலக்கு அளிக்குமா அரசு என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது, நகராட்சிகள், மாநகராட்சி கள் தொடர்புடைய கேள்வியாகும். ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிய விவரம் இதிலே வரவில்லை.

பேரூராட்சி மன்றப் பணியாளர்கள்

* 529 **வினா.—.திரு சா. மெய்யப்பன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தலைமை எழுத்தர், எழுத் தர், தண்டலர், சுகாதார மேஸ்திரி முதலியோருக்கு சம்பளங்கள் என்ன, தரவாரியாக ?

(இ) அவர்களுக்கு பென்ஷன்கள் உண்டா ?

(உ) அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படுகிறதா ? ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) :—

தலைமை எழுத்தர்—ரூ. 90—3—105—4—125.

எழுத்தர்—ரூ. 70—2—90—3—103.

தண்டலர்—ரூ. 55—1—70.

பொதுச் சுகாதார மேஸ்திரி—ரூ. 50—1—60.